## வலிகாமம் வடக்கு பிரதேச சபை

## யாழ்ப்பாணம் மாவட்டம்

### 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்களினை சமர்ப்பித்தல்

2018 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் 27 மார்ச் 2019 ஆந் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக்கை 30 யூன் 2019 ஆந் திகதியும் விரிவான முகாமைத்துவ அறிக்கை 31 ஒக்ரோபர் 2019 ஆந் திகதியும் தலைவருக்கு அனுப்பப்பட்டுள்ளது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பகுதியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினை தவிர்த்து நிதிக்கூற்றுக்களில் 2018 திசெம்பர் 31 இல் வலிகாமம் வடக்குபிரதேசசபையின் நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

**(அ) கணக்கீட்டு கொள்கைகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| சபையினால் நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்காக பின்பற்றப்பட்ட கணக்கீட்டு கொள்கைகள் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | கணக்கீட்டு கொள்கைகள் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட வேண்டும். | பதில் தரப்படவில்லை. |

**(ஆ) கணக்கீட்டுக் குறைபாடுகள்**

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
| --- | --- | --- |
| (அ) சபைக்கு சொந்தமான 55 காணிகளின் பெறுமதிகள் கணிப்பிடப்பட்டு கணக்குகளில் சேர்க்கப்பட்டிருக்கவில்லை. | சொத்துக்களின் பெறுமதிகள் மதிப்பிடப்பட்டு கணக்குகளில் காட்டப்படவேண்டும். | பதில் தரப்படவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | 03 வாகனங்களிற்கு பெறுமதிகள் மதிப்பிடப்பட்டு மீளாய்வாண்டில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்படாமையினால் மோட்டார் வாகனங்களினதும் வண்டிகளினதும் பெறுமதிகள் நிதிக்கூற்றுக்களில் குறைத்துக் காணப்படுகின்றது. | வாகனங்களின் பெறுமதி மதிப்பிடப்பட்டு புத்தகங்களில் காட்டப்படவேண்டும் | பதில் தரப்படவில்லை. |

## 1.4 இணக்கமின்மைகள்

## 1.4.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|---|
| (அ) | 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டம் உப பிரிவு 16(2) | சபையினால் வருடாந்த செயலாற்றல் அறிக்கை நிதிக்கூற்றுக்களுடன் சமர்பிக்கப்பட்டிருக்கவில்லை. | உரிய சட்டத்தின்படி நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் | எதிர்காலத்தில் வருடாந்த செயலாற்றல் அறிக்கை நிதிக்கூற்றுகளுடன் சமர்ப்பிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும். |
| (ஆ) | 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டம் பிரிவு 158 | ரூபா 519,328 ஆதனவரி நிலுவை செலுத்தத் தவறியோருக்கு தவிசாளரினால் பற்றாணைச் சீட்டு வழங்கப்பட்டிருக்கவில்லை | உரிய சட்டத்தின்படி நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் | நிலுவைகள் அறவிட நடவடிக்கை எடுக்கப்பட்டுவருகிறது |
| (இ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கத்தின் நிதிப்பிரமாணங்கள் இலக்கம் 571 | ஒப்பந்தகாரருக்கு மீளளிக்கப்பட வேண்டிய பிடிபணம் தொடர்பில்நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை | உரிய நிதிப் பிரமாணங்களுக்கு அமைவாக நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் | பிடிபணம் ரூபா 474,473 ஆகிய தொகை வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. |
| (ஈ) | வடக்கு மாகாண நிதி சுற்றுநிருபம் 07 மார்ச் 2017 இன் PE/01/2017 ஆம் இலக்கம். | பாதுகாப்பு பணம் செலுத்த வேண்டியவர்கள் செலுத்தியிருக்கவில்லை. | உரிய சுற்றுநிருபத்திற்கு அமைவாக நடவடிக்கை எடுக்கப்படவேண்டும | பிணைப்பணம் அறவிட நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது. |

| | | | |
|---|---|---|---|
| (உ) 29 திசெம்பர் 2016 இன் 30/2016 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கை | சபையின் 10 வாகனங்களிற்கு எரிபொருள் நுகர்வுப் பரீட்சிப்பு மேற்கொள்ளப்பட்டிருக்க வேண்டும் | உரிய சுற்றுநிருபத்திற்கு அமைவாக நடவடிக்கை எடுக்கப்படவேண்டும | உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. |

**1.4.2 வரித் தேவைப்பாடுகளுடன் இணங்காமை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 1987 ஆம் ஆண்டின் 15 இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 154 ஆம் பிரிவின் பிரகாரம், குறித்த சில காணிகள் விற்பனை மீது 1% சதவீத விற்பனை வரி அறிவிடப்படவேண்டிய போதிலும், சபையினால் அவற்றினை அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை | உரிய அதிகாரச்சட்டத்திற்கேற்ப நடவடிக்கை எடுக்கப்படவேண்டும். | காணி ஏலவிற்பனை இடம்பெறும் பட்சத்தில் 1% விற்பனை வரி அறவிட நடவடிக்கை எடுக்கப்படும். |

## 2. நிதிசார் மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 44,440,060 ஆக இருந்ததுடன், அதற்கு நேரொப்பான முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 28,387,663 தொகையாக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டுகளுக்குரியதாக சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| | 2018 | | | | 2017 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| வருமான மூலம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த நிலுவைகள் | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த நிலுவைகள் |
| ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரியும் வரியும் | 98,100 | - | 226,795 | 519,328 | 101,800 | - | 83,786 | 645,129 |
| வாடகைகள் | 10,326,600 | - | 11,713,343 | 30,250 | 3,542,800 | - | 4,805,857 | 5,000 |
| அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 1,620,300 | - | 2,134,165 | - | 1,627,900 | - | 1,452,349 | - |
| ஏனைய வருமானம் | 96,030,400 | - | 71,992,688 | 5,4725,678 | 28,575,700 | - | 68,911,316 | 31,000 |
| | **108,075,400** | **-** | **86,066,991** | **55,275,256** | **33,848,200** | **-** | **75,253,308** | **681,129** |

### 2.2.2 வருமான சேகரிப்பின் செயலாற்றல்

| | கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | 2017 ஆம் ஆண்டில் சேகரிக்கப்பட்ட வருமானம் ரூபா 75,253,308 ஆக இருந்த போதிலும் 2018 ஆம் ஆண்டில் சேகரிக்கப்பட்ட வருமானம் ரூபா 86,066,991 ஆக அதிகரித்துள்ளமையால் 2017 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 2018 ஆம் ஆண்டில் வருமான சேகரிப்பின் செயலாற்றல் ரூபா 10,813,683 இனால் அதிகரிக்கப்பட்டுள்ளன. | பட்டியல்படுத்தப்பட்ட வருமானத்தினை உறுதிப்படுத்தவேண்டும் | பதில் தரப்படவில்லை |
| (ஆ) | சபையினால்பல வருடங்களுக்கு மேலாக வருமானம் பட்டியலிடப்பட்டிருக்காமையானது வருமான சேகரிப்பின் வினைத்திறனின்மையை வெளிப்படுத்துகின்றது. | வருமானம் பட்டியல்படுத்தப்படல் வேண்டும் | பதில் தரப்படவில்லை |

**2.2.3 வீதவரி மற்றும் வரி**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபையின் ஆதனவரிப் பதிவேட்டின் பிரகாரம் ஆதனவரி நிலுவையான ரூபா 469,742 பெறுமதியினை அறவிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை | வீதவரி நிலுவை அறவிடப்பட நடவடிக்கை மேற்கொள்ளப்படவேண்டும். | மிகுதி தொகை ரூபா 469,742 விரைவில் அறவிடுவதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. |

**2.2.4 நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணங்கள்**

**(அ) நீதிமன்ற தண்டப்பணம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மாகாண சபையின் பிரதம செயலாளர் மற்றும் அனைத்து அதிகாரிகளிடமிருந்து 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 2,749,012 தொகையான நீதிமன்ற தண்டப்பணம் பெறப்பட வேண்டியிருந்தன. | நிலுவையினை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவேண்டும். | தண்டப்பணம் அறவிட நடவடிக்கை எடுக்கப்படுகிறது. |

**(ஆ) முத்திரைக்கட்டணம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மாகாண சபையின் பிரதம செயலாளர் மற்றும் அனைத்து அதிகாரிகளிடமிருந்து 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 10,213,959 தொகையான முத்திரைக் கட்டணங்கள் பெறப்பட வேண்டியிருந்தன. | நிலுவையினை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | முத்திரைக் கட்டணங்கள் அறவிட நடவடிக்கை எடுக்கப்படுகிறது. |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 3 ஆம் பிரிவின் பிரகாரம், பொதுச் சுகாதாரம், பொதுப் பயன்பாட்டு சேவைகள் மற்றும் பொது வழிகள், மற்றும் மக்களின் சுகம், வசதி மற்றும் நலன்புரி ஆகிய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியதாக இருந்த பணிகளை நிறைவேற்றுதல் தொடர்பில் அவதானிக்கப்பட்ட விடயங்கள் பின்வருமாறு.

#### (அ) உப விதிகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 126 ஆம் பிரிவின் பிரகாரம்,30 முக்கிய விடயங்கள் தொடர்பில் உபவிதிகள் மேற்கொள்ளப்பட்டிருந்த போதும் அனைத்து விடயங்களும் நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கவில்லை | உபவிதிகளில் குறிப்பிட்ட அனைத்து விடயங்களும் நடைமுறைப்படுத்துவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படவேண்டும் | எதிர்காலத்தில் உபவிதிகள் அனைத்தும் நடமுறைப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும். |

#### (ஆ) செயல்நடவடிக்கைத் திட்டம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| விதிக்கப்பட்டிருந்த உப விதிகளின் பிரகாரம் சபையினால் செயல்படுத்தப்பட்டிருக்க வேண்டிய 30 செயற்பாடுகள் தொடர்பில் வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | உபவிதிகளிற்கிணங்க வருடாந்த செயல்நடவடிக்கைதிட்டம் தயாரிக்கப்பட வேண்டும் | செயல் நடவடிக்கை திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. |

#### (இ) நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிராமை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| தயாரிக்கப்பட்ட வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம், சபையினால் செயற்படுத்தப்பட்டிருக்க வேண்டிய 24 செயற்பாடுகளில் 13 | கிடைக்கின்ற வருமானத்திற்கேற்ப நிகழ்ச்சித்திட்டம் தயாரிக்கப்படவேண்டும். | இவ்வேலைத்திட்ங்களில் 12 வேலைத்திட்டங்கள் நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

செயற்பாடுகளுக்கு மாத்திரம் வருடாந்த பாதீட்டினூடாக ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தமையினால், ரூபா 33,000,000 பெறுமதியான 11 செயற்பாடுகள் செயற்படுத்த முடியாதிருந்தது

**(ஈ) கைவிடப்பட்ட செயற்பாடுகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| இரண்டு செயற்பாட்டின் செயலாற்றலினை ஆரம்பிப்பதற்கு ரூபா 10,262,245 தொகையொன்று செலவிடப்பட்டிருந்த போதிலும், 2018 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் எதிர்பார்க்கப்பட்ட விளைவுகளினைப் பெற்றுக்கொள்ளாது அந்த செயற்பாடுகள் கைவிடப்பட்டிருந்தது. | என்ன நோக்கத்திற்காக செயற்றிட்டம் அமைக்கப்பட்டதோ அந் நோக்கம்பயன்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கொல்களத்தினையும் மற்றும் மலக்கழிவு சுத்திகரிப்புத் திட்டத்தையும் செயற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. |

**(உ) திண்மக் கழிவு முகாமைத்துவம்**

| | கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|
| (i) | கீரிமலையில் திண்மக்கழிவுகள் அகற்றுவதற்காக ஒதுக்கப்பட்ட பிரதேசத்தில் நாள்தோறும் சேகரிக்கப்படுகின்ற கழிவுகள் நறுக்கப்பட்டு மண்தட்டு இடப்பட்டு மூடப்படுவதில்லை. | திண்மக்கழிவுகள் நறுக்கப்பட்டு சுற்றுச்சூழலிற்கு பாதிப்பு ஏற்படாத வகையில் மண்தட்டிடப்பட்டு மூடப்பட வேண்டும். | கழிவுகளை நறுக்கி மண்தட்டு இடுவதற்கான நடவடிக்கைகள் எமது சபையால் மேற்கொள்ளப்பட்டுள்ளது. |
| (ii) | தேசிய கொள்கைகளின் படி திண்மக்கழிவுகள் தரம் பிரிக்காமல் சேகரிக்கப்படுகிறது. | திண்மக்கழிவுகள் தரம் பிரிக்கப்பட்டு சேகரிக்கப்பட வேண்டும். | திண்மக்கழிவுகள் தரம் பிரிக்கப்பட்டு அகற்றுவதற்குரிய நடவடிக்கைகள் விரைவில் மேற்கொள்ளப்படும். |

**(ஊ) சுற்றுச்சூழல் பிரச்சினைகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| திண்மக்கழிவுகள் அகற்றுவதற்காக தெரிவு செய்யப்பட்டிருந்த பிரதேசத்தில் கொசுக்கள் நுளம்புகள் பரவுவதனை தடுப்பதற்காக கொசு எண்ணெய் அடித்தல் மற்றும் துர்நாற்றத்தை தடுப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவேண்டும் | உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும். |

**3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபைக்குட்பட்ட காங்கேசன்துறை, மயிலிட்டி ஆகிய உப அலுவலகங்களுக்குரிய ஆதனங்கள் மீள மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டிருந்தும் ஆதன வரி பதிவேட்டினை பராமரிப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | சபையினால் ஆதனவரிப்பதிவேடுகள் உரியவாறு பராமரிக்கப்பட வேண்டும். | சில உப அலுவலகங்களுக்குரிய ஆதனங்களுக்கான இறுதி மீள்மதிப்பீட்டு இறுதிக்கட்ட நடவடிக்கைகள் நடைபெற்றுவருகிறது. |

**3.3 மனிதவள முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபையானது உரியவாறு மனித வளத்தைப் பெற்று ஈடுபடுத்தாமையினால் அத்தகைய 04 மனிதவளங்களினால் நிறைவேற்றப்பட வேண்டிய சேவைகள் தாமதமடைந்துள்ளமை கணக்காய்வில் அவதானிக்கப்பட்டுள்ளது. | பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும். |

### 3.4 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபைக்கு சொந்தமான உருளை போன்ற வாகனங்கள் வருமானத்தினை ஈட்டுவதற்காக பயன்படுத்திய போதும், அவற்றின் மூலம் பெற்றுக்கொண்ட வருமானத்தினை விட செலவினமே அதிகமாக காணப்பட்டிருந்தன | சபையின் சொத்துக்களை வினைத்திறனாக பயன்படுத்தப்படுவதனை உறுதிப்படுத்த வேண்டும். | பிரதேச சபை வீதிகளில் உள்ள பற்றைகளை துப்பரவு செய்வதற்கு இவ் வாகனம் பயன்படுத்தப்பட்டது. |

### 3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

#### 3.5.1 சுவீகரிக்கப்படாத சொத்துக்கள்

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ரூபா 7,836,360 பெறுமதியான 05 வாகனங்கள் சபையின் பெயருக்கு உரிமை மாற்றப்படுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | வாகனங்கள் உரிமை மாற்றப்படுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். | வாகன உரிமை மாற்றம் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. |

#### 3.5.2 விளைவற்ற சொத்துக்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 02 வாகனங்கள் பாவனைக்கு உதவாத நிலையில் காணப்படுகின்றன. | வாகனங்கள் தொடர்பாக உரிய பராமரிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும். | ஆவணங்கள் இல்லாத வாகனம் தொடர்பாக இறுதி நடவடிக்கைகள் எதனையும் மேற்கொள்ளமுடியாதுள்ளது. |

**4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| சபையின் ஆளுக்குரிய வரும்படிகள், பயணச்செலவுகள், மூலதனச் சொத்துக்களைப் பழுதுபார்த்தலும் பேணலும், வட்டிக் கொடுப்பனவுகள், பங்குலாபங்கள், மிகையூதியங்கள், மானியங்கள்,ஓய்வூதியங்கள், இளைப்பாற்று நயங்கள், பணிக்கொடைகள் போன்ற செலவினங்கள் சாதகமாகவும் வழங்கு பொருட்களும் தேவைப்பொருட்களும் ஏற்றியிறக்கல், தொடர்பிணைப்பு பயன்பாட்டுச்சேவை மற்றும் பிறசேவைகள், செலவினம் பாதகமாகவும் காணப்படுகின்றன. | பாதீட்டினை சரியான முறையில் திட்டமிடுவதற்கான உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். | பதில் தரப்படவில்லை. |